திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அந்தக் கம்பெனியை 3—3—1987 அன்று பார்வையிட்டதாகவும் அந்தக் கழிவு நீர் பாசனத்திற்குத் திருப்பி விடப்பட்டு விவசாயிகளால் பயன்படுத்தப்படுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தாலும் அந்தக் கம்பெனிக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் இன்னும் அனுமதி வழங்கவில்லையென்பதையும் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் நிலங்களும், குடிநீரும் பல்வேறு வகைகளிலே பாதிக்கப்படுகின்றன. அந்த அய்யன் ஏரிக்கு மேல் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய நிலங்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில் உடனடியாக அந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி அந்த விவசாயிகளைப் பாதுகாக்க இனிமேலாவது அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கழிவு நீர் வெளியாகின்ற காரணத்தினால் விளைநிலங்கள் பல பாதிக்கப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியும். இதுபோன்ற மோசமான நிலைமைகளைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வாரியத்திற்கு அரசு அறிவுறுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை அரசு ஏற்று நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) நிதி திரட்டியதற்காக மின் வாரிய ஊழியர்கள்மீது எடுத்துள்ள நடவடிக்கை.

திரு. வி. பி சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மின் ஊழியர்களில் சிலர் அவர்களின் தொழிற் சங்கம் வெளியிட்ட சிறப்பு மலருக்கு விளம்பரம் பெற்றார்கள் என்பதற்காக 46 ஊழியர்கள் மீது எடுத்த ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்று தொழிலாளர் துறை ஆணையரின் உத்தாவிற்குப் பிறகும், மற்றும் சென்னை உயர்நீதி மன்றம் தடை உத்திரவு போட்ட பிறகும், தமிழ்நாடு மின்வாரியம் தன்

1987 மார்ச் 31] [திரு. வி. பி. சிந்தன்]

முயற்சியைக் கைவிடாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

பொது மக்களை வற்புறுத்தி, பலவித தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ நிதி திரட்டுவது, வாரியத் தொழிலாளர்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. வாரியக் களப்பணியாளர்களின் தயவு தேவைப்படுவதால் இத்தகைய வேண்டுகோள்களை பொது மக்களால் நிராகரிக்க முடிவதில்லை. இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்களுக்குத் தொல்லை தருவதோடு நில்லாமல், வாரியத்தின் மற்றும் அரசாங்கத்தின் நற்பெயரைப் பொதுமக்கள் கண்ணோட்டத்தில் களங்கப்படுத்தி யுள்ளன.

2. நுகர்வோரிடமிருந்து வந்த புகார்களின் அடிப்படையில் வாரிய ஊழியர்கள் பொதுமக்களிடமிருந்து எந்த உருவிலும், எந்தப் பெயரிலும், எந்த முறையிலும் எந்தவிதமான நிதியும் திரட்டக்கூடாது எனத் தெளிவாகத் தெரிவித்து 12—7—1983 அன்று மின்வாரியம் சுற்றறிக்கை ஒன்று வெளியிட்டது. சிறப்பு மலர்களில் விளம்பரங்கள் அச்சிடுவதற்கான கட்டணம் என்ற பெயரிலும் இத்தகைய நிதி வசூலிக்கும் முறை திறமையாகக் கையாளப்படுகிறது. எனவே, இத்தகைய சிறப்பு மலர் விளம்பர வாயிலான நிதிகளும் இவ்வுத்தரவின்கீழ் அடங்கும் எனக் குறிப்பாக இந்தச் சுற்றறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டது. இவ்வுத்திரவுகள் மீறப்பட்டால் கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப் பட்டது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 மார்ச் 31

3. தெளிவாகவும் ஐயமில்லாவகையிலும் சொல்லப்பட்ட இவ்வுத்திரவுகளையும் மீறி, வாரிய ஆணைகளை வெளிப்படையாக இகழும் வகையில் பொதுமக்களிடம் நிதி வசூலிப்பதை வாரியத்திலுள்ள குறிப்பிட்ட யூனியன்கள் தொடர்ந்து செய்து வந்துள்ளன.

4. எனவே, சி.ஐ.டி.யூ. நடத்திய 5-வது மாநில மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலருக்கென நுகர்வோரிடமும், பொதுமக்களிடமும் விளம்பரக் கட்டணங்கள் வசூலித்ததற்காக மேற்சொன்ன யூனியனைச் சார்ந்த 41 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. இந்த யூனியன் இன்னொரு யூனியனுடன் (தமிழ்நாடு மின்சார வாரியக் கணக்காயர் மற்றும் களத் தொழிலாளர் சங்கம்) சேர்ந்து, தொழிலாளர் ஆணையர் முன் ஜூலை 1985-ல் ஒரு தொழில் தகராறை எழுப்பியது. தொழிலாளர் ஆணையர், ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைவிடுமாறு வாரியத்தைப் பணித்துள்ளார் என்ற இந்தச் சட்டமன்ற உறுப்பினர் கூற்று சரியல்ல. இந்த விவகாரத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதால் தொழிலாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வாரியம் "விரைவுபடுத்தப்பட வேண்டாம்" என்றுதான் தொழிலாளர் இணை ஆணையர் கேட்டுக் கொண்டார். இவ்வேண்டுகோளை வாரியம் ஏற்றது. இதன் காரணமாக விசாரணைகள் தொடங்கப்பட்ட போதிலும் இறுதி ஆணைகள் பிறப்பிப்பது ஒத்திப்போடப்பட்டது. இதற்கிடையில் வேறொரு யூனியனைச் சார்ந்த இரு தொழிலாளர்கள் ரிட் மனுக்களை (எண் 8552 மற்றும் 8835/85) கொடுத்தனர். இவ்வழக்கில் உயர்நீதிமன்றம் இந்நடத்தை முறைகேடானது என்று கருத்து தெரிவித்து தள்ளுபடி செய்தது. இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. 26—9—1986 தேதியிட்ட தீர்ப்பிற்கு இணங்க யூனியன்கள் கொடுத்துள்ள தொழில் தகராறில் தொழிலாளர் துறையின் விசாரணையோ, புலனாய்வோ இனித் தேவையில்லை எனக்கருதி தொழிலாளர் ஆணையர் 9—1—1987 அன்று உத்திரவு (பத்தி 5-ல் குறிப்பிட்ட தொழிற் தகராறில்) பிறப்பித்து இத் தகராறை முடித்து வைத்துவிட்டார்.

1987 மார்ச் 31] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

6. தொழிற்சங்க மலர் வெளியீட்டின் மூலம் விளம்பரம் பெற்றதாக 41 மின்வாரிய ஊழியர்கள்மீது, வாரியப் பணியிலிருந்து வேலை நீக்கம் செய்வதற்காகக் "காரணம் காட்டும் விளக்க நோட்டீஸ்" அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஆறு மின்வாரிய ஊழியர்கள் உயர்நீதி மன்றத்தை அணுகி இடைக்காலத் தடை பெற்றுள்ளனர். எனவே இந்த ஆறு நேர்வுகளிலும் மேல் நடவடிக்கை எடுப்பதை வாரியம் ஒத்திப்போட்டுள்ளது. இவ்விடைக்காலத் தடையாணையானது இதர 35 பேர்களுக்குப் பொருந்தாது என்பதால் அவர்கள் மீதான நடவடிக்கை, மின்வாரியத்தால் தொடரப்படுகின்றது.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் டெல்லி உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒன்றில் தொழிற்சாலைக்குள்ளே நடைபெறக்கூடிய முறைகேடுகளைப்பற்றி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும், தொழிற்சாலைக்கு வெளியே நடக்கிற எந்த நடவடிக்கையானாலும் அடிதடி உட்பட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க முடியாது, போலீசோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோதான் அதுபற்றி நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் தெரிவித்திருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்துள்ளதா? அந்த அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு போட்டுள்ளது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த கோர்ட் தீர்ப்பு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் கோர்ட் தடை விதித்ததினால் 6 பேர்கள் மீது உள்ள விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விரோதமான அந்த நடவடிக்கையை மின்வாரியம் தொடருமேயானால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அந்த வசூலில் ஈடுபடுவார்கள் என்பதை நாங்கள் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

[1987 மார்ச் 31

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் தொழிலாளர் துறை ஆணையர் இந்த ஒழுங்கு நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்று எழுதியிருப்பதாகவும் அதன் பின்பும் வாரியம் ஒழுங்கு நடவடிக்கையைத் தொடருவதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிலாளர் ஆணையர், அந்த நடவடிக்கையைக் கைவிடவேண்டுமென்று சொல்லவில்லை என்று வாரியம் தெரிவிக்கிறது. மேலும் மின்சார வாரியம், விளம்பரத் திற்காகப் பணம் வாங்கக்கூடாது என்று போட்ட உத்தரவின்மீது தொடுக்கப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் மின்சார வாரியத்தினுடைய உத்திரவு நியாயமானது என்று சொல்லி யிருக்கிறது. அதன்மீது மேல் முறையீடு (Writ Appeal) செய்திருக்கிறார்கள். அது நிலுவையில் இருக்கிறபோது எந்த அபிப்பிராயமும் என்னால் சொல்லமுடியாது.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிப் பிரகாரம் இரண்டு கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அமருங்கள்.

(முற்பகல் 10-10)

(ஈ) திருக்கோயில் முதுநிலைப் பணியாளர் சங்கத்தினர் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பாக, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு திருக்கோயில் முதுநிலைப் பணியாளர் சங்கம் அதன் கோரிக்கைகளை வலியுறுத்தி, திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் முன்பும் மற்றும் தமிழகத்தில் பல இடங்களிலும் உண்ணாவிரதம் இருப்பதால்